(பிற்பகல் 12-40)

(ஐ) ஆந்திரா நிலவரி விதிப்பு (தரப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு, 1979 (45/1979).

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே,

" ஆந்திரா 1979 ஆம் ஆண்டு நிலவரி விதிப்பு (தரப்படுத்துதல்) ரத்துச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1979) நிறைவேற்றப் பெற வேண்டும்" என மொழிகிறேன்.

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஓ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு † (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 48/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

* 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 27 ஆம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

† 1979 ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.